Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 14

## ரா.ப.அருஸ் படைப்புகளில் மெய்ப்பாடுகள்

*ப. சக்திவேல்*
*முனைவர்ப் பட்ட ஆய்வாளர்*
*தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*
*மதுரை*

## *முன்னுரை*

இன்றைய அவசர உலகில் உணர்வுகளுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. உணர்வுகளே ஒவ்வொரு உறவுகளையும் இணைக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் மனிதர்களின் வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக இந்த மெய்ப்பாடுகள் அமைகின்றன. அவ்வாறான மெய்ப்பாடுகளை இலங்கையிலுள்ள ரா.ப.அருஸ் என்னும் படைப்பாளரின் படைப்புகளின் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மெய்ப்பாடு

கடவுள் படைத்த உயிரினங்களில் மனிதப் பிறவியே மிகவும் மகத்தான பிறவி எனலாம். ஏனெனில் மனிதனுக்கு மட்டுமே எதிர்க்க நிற்கின்ற உயிரினங்களின் உணர்வுகளைப் புரிந்து செயல்படத்தக்க அறிவான பகுத்தறிவு இருக்கின்றது. எனவே தான் மனித உயிர் உன்னதமான ஒரு பிறவியாகும். மனித உடலானது வெளிப்படுத்தும் உணர்வுகளைஇ உண்மை நிலையை ஓர்தல் மெய்யுணர்வாகும். மெய் என்ற சொல்லுக்குப் பொருள் உண்மைத் தன்மை எனப்

பொருள் கொண்டும்இ மெய்ப்பாடு என்பது பொருளின் புலப்பாடு என்று பொருள் கூறுதலும் உண்டு. எனவே மெய்யின் கண் தோன்றும் உணர்வுகளை மெய்ப்பாடு என்பர். இதனைத் தொல்காப்பியர்இ

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப” (தொல். பொருள் மெயப். 1197)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வழி எண்வகை மெய்ப்பாட்டையும் விளம்பியுள்ளார்.

## நகை

தொல்காப்பியர் வகைப்படுத்திய மெய்ப்பாடுகளில் முதலில் வைத்து நிலைநிறுத்துவது நகை என்ற மெய்ப்பாட்டைத்தான். ஏனெனில் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனால் மட்டுமே நகைச் சுவையை உணர முடியும். இந்த நகைச் சுவை உணர்வை நான்கு நிலைகளில் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளர். இதனைஇ

“எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப” (தொல். மெய். 1198)

என்ற நூற்பா வழி கூறுகிறார்.

‘அவன் கடிக்கவுமில்லை அது வெடிக்கவுமில்லை’ என்ற கவிதையில் மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞன் அறியாமையால் அனைத்திற்கும் புன்னகைக்கும் நிலையைஇ

“அனைத்துக்கும்
அனைவருடனும்
புன்னகைக்கும் மனசு
எங்களுரிலேயே
இவனுக்கு மட்டுந்தான்!” (மரகதம் சிவந்ததேனோ--52)

என்ற வரிகளில் பேதமை மெய்ப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறார்.

## அழுகை

அழுகை என்பது ஒரு அவலச்சுவையாகும். நகைக்கு எதிரான மெய்ப்பாடே அழுகை என்பதாகும். எனவே தான் தொல்காப்பியர் நகையின் பின் அழுகையை அமைத்துள்ளார். பிறரால் தாழ்வுபடுத்தப்படும் போதும்இ பொருள் அல்லர் உயிர் இழுப்பு எற்படும் போதும்இ வறுமை சூழும் போதும் தன்னிலையில் இருந்து தாழும் போதும் அழுகை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். இதனைஇ

“இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவில் கொள்கை அழுகை நான்கே” (தொல். மெய். 1199)

என்ற நூற்பா வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

'விரக்தியில்' என்ற கவிதையில் இலங்கைப் போரினால் தன் குடும்பத் தலைவியை இழந்த கணவனின் சோகத்தினை,

"தன் மனைவியை
இழந்த சோகத்தில்
தூக்கமின்றித் தவித்த
எனதப்பாவிற்குக் கூட
இந்தத் துப்பாக்கிதான்
நிரந்தரத் தூக்கத்தினைப்
பரிசளித்தது" (மரகதம் சிவந்ததேனோ-24)

இக்கவிதையில் போரின் மூலமாக தன் மனைவியை இழந்த கணவன் இழவு மூலமாக தூக்கமின்றித் தவித்த அவல நிலை விளக்கப்படுகிறது.

இளிவரல்

இளிவரல் என்பதற்கு துன்பம் எனப் பொருள். பிறர் இகழ்ச்சியாக பேசும்போதோ பார்க்கும் போது பிறக்கும் அவலம். இளிவரல் மானம் குன்ற வருவது. "இளிவலின் வாழாத மானமுடையார்" எனவும், "இடுக்கண் வரினும் இளிவந்த செய்யார்" எனவும் வருதலால் இப்பொருளை விளக்குவர். இதனை,

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்பற வந்த இளிவரல் நான்கே" (தொல். மெய். 1200)

என்று துன்பம் வரும் நிலைக்களன்களை தொல்காப்பியர் சுட்டுகின்றார். முதுமை காரணமாகவும், நோய் காரணமாகவும், வருத்தம் காரணமாகவும், எளிமை காரணமாகவும் இளிவரல் உண்டாகும்.

போர்ச்சூழல் காரணமாக உறவுகள், வீடு, வாசல்களை இழந்து உயிர் பயத்தால் உடமைகளுடன் தஞ்சம் தேடி ஒரு வேலை உணவுக்காக அகதிகளாக வாழும் மனித வாழ்வின் அவல நிலையைத்,

"தாயிழந்து
தந்தையிழந்து
கணவனிழந்து
மனைவியிழந்து
ஊரிழந்து
உறையுமிழந்து
யாவரும்
ஒரே குடையின் கீழ்.....
அகதிகளாக! (மரகதம் சிவந்ததேனோ-57)

என்ற வரிகளில் வருத்தம் காரணமாக இளிவரல் தோன்றுவதைச் சுட்டுகிறார்.

மருட்கை

மருட்கை என்பது வியப்புச் சுவை உடையது. நாம் அறியாத புதுமையைக் காணும் போது வியப்பு உண்டாகும். இதுவரைக் காணாத ஒன்றைக் கண்டதும் பெருமை உண்டாகும். அளவில் சிறயதாக கண்டாலும் வியப்பு தோன்றும்.

“புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
முதுமை சால மருட்கை நான்கே” (தொல். மெய். 1201)

என்று தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

‘உயிருடனான உரையாடல் என்ற கடித இலக்கியத்தில் காதலனின் உழைப்புஇ முயற்சி மாபெரும் வெற்றி கண்டதை ஊரார் வியந்து பார்க்கும் நிலையை எண்ணி காதலி பெருமையாக நினைக்கும் சூழலை

“21 லை 21 மாபெரும் சாதனை முயற்சி!
என்ற வாசகம் தாங்காத ஊடகங்களில்லை
எம் நாட்டின் அத்தனை சாலைகளிலும் உங்களைக் கண்டு
களித்தேன்
என்ன புதினம்!
……………………………………………….
…………………………………………………..
எமது காதலைக் காரமாய் தூற்றிய அவர்கள்
தற்போது உனக்கும் எனக்கும் சேர்த்து வார்த்தையால் மகுடம்
சூட்டுகிறார்கள்” (உயிருடனான உரையாடல்.-88-89)

என்ற வரிகளில் காதலனை எண்ணி காதலி பெருமை கொள்ளும் தன்மையைக் காண முடிகின்றன.

**அச்சம்**

அச்சம் என்பதனை தனக்கோ தான் நேசிப்பவர்களுக்கோ ஏதாவது அபாயம் நேரிட்டுவிடும் என்பது போன்ற உணர்ச்சியால் அஞ்சிக் கொண்டே பரபரப்புடன் இருக்கும் ஒருவித மனப்பான்மை என்பர். அச்சத்தினை வடமொழியாளர்கள் ‘பயம்’ எனக் குறித்தனர்.

தெய்வம்இ விலங்குஇ கள்வர்இ அரசரை எதிர்த்து தோற்றுப் போன நிலையில் ஏற்படும் அச்சம் ஆகிய நிலைகளும் அச்ச நிலைக்கு உரியன.

“அணங்கே விலங்கே கள்வர் தம் இறை எனப்
பிணங்கல் சாவா அச்சம் நான்கே” (தொல். மெய். 1202)

என்கிறார் தொல்காப்பியர்

‘வடக்கின் விதி’ என்ற தலைப்பில் போரினால் அமைதியிழந்த மக்கள் சொந்தபந்தத்தினை இழந்து பார்க்கும் திசை எங்கும் பிணக்குவியலை காணுகின்ற அப்பாவி மக்களின் வழியே அச்சத்தை விளக்குவதாக அமைகின்றது.

“பிணவாடைச்
சுவாசித்தல்களில்
இருதயம்

இயக்கமிழந்து போய்விடுமோ
எனப்
பயமாக இருக்கிறது" (மரகதம் சிவந்ததேனோ-38)

என்ற வரிகளின் மூலமாக அச்சச் சுவையை விளக்குகின்றார் ஆசிரியர்.

பெருமிதம்

பெருமிதம் என்பது வீரத்தினைக் குறிக்கும். கல்வியால்இ புகழினால்இ கொடையினால்இ அஞ்சாமையால் பெருமிதம் என்னும் சுவை நிகழும்.

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" (தொல். மெய். 1203)

என்ற தொல்காப்பியக் கருத்துப்படி கல்வியன் காரணமாகப் பெருமிதம் ஏற்படுவதைக் கவிஞர் உயிருடனான உரையாடல் என்ற நூலில் இவ்வாறு விளக்குகிறார்.

"ஜனாதிபதி தனது வாழ்த்துரையில்இ நீங்கள் அறிவுலகத்திற்கோர்
ஜாம்பவான் என்று கூறிய செய்தி எம்மூர் ஜனங்களின் மனதில்
உங்களுக்கோர் அழகான நாற்காலியினை இட்டிருக்கிறது" (உயிருடனான உரையாடல்-89)

என்ற வரிகளில் நாட்டின் ஜனாதிபதியே புகழ்ந்துரைப்பதனால் பெருமிதம் தோன்றுவதனை சுட்டுகின்றார்.

வெகுளி

கோபத்தின் நிலைக்களன்களாக உறுப்புகளை துண்டித்தல்இ ஒடுக்கப்பட்ட மக்களை துன்புறுத்துதல்இ தீயவார்த்தைகளால் மனதைக் காயப்படுத்துதல்இ கொலை செய்தல் போன்ற நான்கு நிலைகளில் சினம் தோன்றும் என தொல்காப்பியர் சுட்டுகிறார்.

"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே" (தொல். மெய். 1204)

'காலத்தைக் கடிந்து கொள்ளல்' என்ற தலைப்பில் ஒடுக்கப்பட்டவர்களை துன்புறுத்தும் நிலையை கவிஞர்இ

"காலிழந்து
கையிழந்து
குறையுடலாய்க் கிடப்போரின்
ஓலத்தைக் கேட்கையிலே
இந்தக்
காலத்தின் மீதெனக்கும்
காறிவிடத்
தோன்றுதிப்போ....! (மரகதம் சிவந்ததேனோ-49)

போரினால் ஏற்பட்ட இழப்புகளைப் பார்க்கும் கவிஞரின் சினம் கவிதை மூலமாக வெளிப்படுகின்றன.

உவகை

இது நகைச்சுவையோடு தொடர்புடையது. ஆயினும் நகையினின்று சிறிது வேறுபட்டதும் ஆகும். மனத்தளவில் தோன்றும் மலர்ச்சியே உவகையாகும். செல்வம் காரணமாக ஏற்படும் நுகர்ச்சி, புலமையால் ஏற்படும் அறிவு புணர்ச்சியினால் உள்ளம் ஒன்றியவர்களோடு கூடியாடும் விளையாட்டாலும் அல்லல் நீங்கிய உவகை தோன்றும் என்பதை தொல்காப்பியர்,

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே" (தொல். மெய். 1205)

என கூறுகிறார்.

'எச்சில் தட்டு' என்ற கவிதையில் காதலர் இருவர் நெடுநாளாக சந்தித்து பேசி இன்புறுகின்றனர் பின்னர் மெய்யினால் இன்புறும் புணர்ச்சியை,

"நம்
காதலின் பந்தியில்
ஓராண்டாய்
சைவச் சாப்பாடு
அதைத் தொடர்ந்து
அத்தனையும்
அசைவம் தான்!" (எச்சில் தட்டு.-27)

என்று உடலினால் புணர்ந்து கொள்ளும் உவகையாகும்.

# முடிவுரை

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் மனிதர்களின் மெய்ப்பாடு உணர்வுகளைத் தொல்காப்பியர் துள்ளியமாகவும் நுட்பமாகவும் விளக்கியுள்ளார். இத்தகைய எண்வகை மெய்ப்பாடுகளை ரா.ப.அருேஸ் படைப்புகளில் பொருத்திப் பார்க்கும் போது கவிஞரின் அறிவு நுட்பம் புலப்படுகின்றது. மேலும் இலக்கியங்கள் உணர்ச்சிக்கு ஆட்பட்டவை என்பது புலனாகிறது.